| O.S.No. 06/2025 | PW1: திருமதி. J. சித்ரா<br>க/பெ. திரு. ஜெகந்நாதன் | 06-04-2026 |
| --- | --- | --- |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>கூடுதல் முதல் விசாரணையின்பேரில் 1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வா.சா.ஆ.10 ஆவணம் 2022-ம் ஆண்டு உண்மை நகலாக பெற்றதாக உள்ளது என்றால் சரிதான், அசல் ஆவணம் தொலைந்துவிட்டதால் அதனை வாங்கினேன். அசல் ஆவணம் தொலைந்தது பற்றி என் பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.10 ஆவணத்தினை வழக்கிற்காக உருவாக்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தின் உண்மைத்தன்மை தெரியக்கூடாது என்பதற்காக லேமினேட் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10-ல் உள்ள மனை எண். 81 வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 உண்மை நகல் என்று கொடுத்துள்ளதால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2. வா.சா.ஆ.11-ல் பழைய புல எண் என்பதை ஒயிட்னரால் அழித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.13 ரசீதில் மனை எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.14-ல் மனை எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 ஆவணங்கள் வழக்கிற்காக என்னால உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த நீதிமன்றத்தில் ஏற்கனவே இந்த வழக்குடன் சேர்த்து இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கினை என் தகப்பனார் சொத்திற்காக பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன்.

3. வா.சா.ஆ.14 ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.13-ல் 2021-ம் ஆண்டு பணம் டெபாசிட் செய்ததாக உள்ளது என்றால் சரிதான். குடிநீர் இணைப்பு எண் பற்றி வா.சா.ஆ.13-ல் இல்லை என்றால் சரிதான். 1993 முதல் 2000ம் ஆண்டு வரை வழக்கு சொத்து சம்மந்தமாக எந்த வருவாய்த் துறை ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/- J. சித்ரா

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.06 11:16:54 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**